

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்

செட்டித்தெரு நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# Dr. கணபதிப்பிள்ளை நடராஜா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த 31ம் நாள் நினைவாக

# நினைவு மலர்

20-05-2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நெடுத்தீவைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெரு
நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்

# Dr. கணபதிப்பிள்ளை நடராஜா

**(ஓய்வு பெற்ற பதிவு வைத்திய அதிகாரி)**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்


# நினைவு மலர்

**20. 05. 2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பாரினில் எம்மை
அன்புடனும் பண்புடனும் வாழவைத்து
அன்பின் திருவுருவாய் இனிதே வாழ்ந்த
எமது
அன்புத் தெய்வம் திருவாளர்
கணபதிப்பிள்ளை நடராஜா
அவர்களின் ஆத்மா இறைவனின்
பாதங்களில் கலந்து
நித்திய ஆத்மசாந்தி பெறவேண்டும் என
இறைவனைக் கண்ணீரோடு இறைஞ்சி
இம் மலர்தனை அவர்தம் பாதக்
கமலங்களில்
காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.



***ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!***

*குடும்பத்தினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெரு நல்லூரை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# Dr. கணபதிப்பிள்ளை நடராஜா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

20-05-2019


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணுலகில்
21.08.1938

விண்ணுலகில்
20.04.2019

அமரர்

# Dr கணபதிப்பிள்ளை நடராஜா

அவர்கள்

## திதி வெண்பா

துலங்கிடும் விகாரி வருடம் தூய சித்திரைத் திங்கள்
ஏழாம் நாள் அபரபக்க பிரதமை – அமிர்த சித்தத் திதியதனில்
இலங்கு புகழ் நற்சீராளன் நடராஜா
நாடினார் நல்லூரான் திருவடியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்னாரின் தாயார்
அமரர் திருமதி க.வள்ளியம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

# தெய்வத்தமிழ் திருமுறைப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

சலம் பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கினும் உனை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலிகொண்டுளல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த் ()து
உன் விரை யார்சுழற் (கு) என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்(து) உன்னைப் போற்றி
சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் னடியின்கீழிருக்க வென்றார்.

# திருப்புகழ்

எதிரிலாத பக்தி தனை மேவி
இனிய தாணினைப்பை இருபோதும்
இதய வாரிதிக் குறைவாகி
எனதுளோ சிறக்க அருள்வாயே
கதிர்காம வெற்பிலுறை வோனே
கனக மேருவொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் *Dr.* கணபதிப்பிள்ளை நடராஜா அவர்களின் வாழ்க்கை வரலாறு

இலங்கைத் திருநாட்டின் வட பாகத்தில் அமைந்த சப்த தீவுகளில் ஒன்றான பசுத்தீவு எனும் நெடுந்தீவின் கிழக்கே புகழ்பெற்ற இருமரபும் தூய தனிநாயக முதலி வழித்தோன்றியவரும், அனுராதபுரத்தில் பெரும் பேரும் புகழுடன் வாழ்ந்து வந்த பிரபல வர்த்தகருமான கணபதிப்பிள்ளை தனது சகோதர சகோதரிகளின் முதற் பிள்ளையினை தன்னுடன் தங்க வைத்து அவர்களுக்கு கல்விபுகட்டி தன் சகோதர சகோதரிகளினது குடும்பங்களிற்கு உறுதுணையாக வாழ்ந்து வந்தார். இவர் வள்ளியம்மை எனும் மாதரசியை கரம்பிடித்து அவர்களின் இல்லறம் எனும் நல்லறத்தின் பயனாக 1938 ஆவணி 21ல் புவிதனில் நடராஜா எனும் நற்சீராளன் வந்துதித்தார். இவரின் பாசமிகு சகோதரியாக வரதலக்ஷ்மி எனும் வனிதை பிறந்தார்.

தனது 12வது வயதில் எதிர்பாராதவிதமாக தந்தையை இழந்தபோதும் மனந்தளராமல் குடும்பத்தை பொறுப்புடனும் பாசத்துடனும் பாதுகாத்து வந்தார்.

இவ்வாறு வளந்துவரும் காலங்களில் தனது ஆரம்ப கல்வியை அனுராதபுரத்திலும் பின்னர் உயர்கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும், மற்றும் மருத்துவப் படிப்பினை கொழும்பு மருத்துவக் கல்லூரியிலும் கற்று தனது 23வது வயதில் புத்தளம் அரசினர் வைத்தியசாலையில் வைத்தியராக தனது முதற்பணியை ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் 1962ல் ஆதார வைத்தியசாலை சிலாபத்திலும் தொடர்ந்து குருப்பனாவல முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை மற்றும் நட்டாங்கண்டல் அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றி வரும் வேளையில்,

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனை மாட்சித்து ஆயினும் இல்**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க நாகலிங்கம் மீனாட்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி மனோன்மணியை 1968ல் கரம்பிடித்தார். இதனால் அமரர்களான கந்தையா, பசுபதி, மற்றும் தம்பிஐயா, மேரிகிறிஸ்டீன் தங்கம்மா சுந்தரேஸ்வரன், செல்வராஜா, கணபதிப்பிள்ளை, பரமநாதன் ஆகியோரை *மைத்துனர்களாகக் கொண்டு மகிழ்ந்திருந்தார்.*

*தனது ஒரே சகோதரியான வரதலக்ஷ்மியின் அன்புக் கணவரான முத்தையா நல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரான ஓட்டோ சப்ளையர்ஸ் நிறுவுனர் அருந்தவநாதனை மைத்துனராகவும், அவர்களின் பிள்ளைகளான அனுஷ்யா, ஜெயந்தன், ஈஸ்வரன், ஜெகதீசன் ஆகியோரை மருமக்களாக கொண்டு அவர்களிடம் மட்டற்ற அன்புடன் வாழ்ந்து வந்தார்.*

***மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்***
***நன்கலம் நன்மக்கட் பேறு***

*என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்க ஜனனிபிரியதர்ஷினி, ஹம்சா சசி தாரணி, சுகன்யா, கவிதா, விஷ்ணுகாந்தன் எனும் நன் மக்கட்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செல்வங்களைப் பெற்றும் அவர்களுக்குக் கல்வியைப் புகட்டியும் இன்புற்று வாழ்ந்து வந்தார். தொடர்ச்சியாக 1973ல் படியத்தலாவ அரசினர் வைத்தியசாலையிலும் 1977ல் கட்டுக்கல அரசினர் வைத்தியசாலையில் தனது மருத்துவ பணியினை செவ்வனே செய்து* அவ்வவ் பிரதேச மக்களின் மனதில் உயர்ந்திருந்தார். மும்மொழியிலும் கொண்ட தேர்ச்சி காரணமாக தொடர்ச்சியாக கண்டி, கிபிஸ்ஸ, மாத்தளை அரச வைத்தியசாலையில் பணியாற்றி தாயகப் பிரதேசத்திற்கு பதவி உயர்வுடன் கூடிய பணிமாற்றம் பெற்று 1994ல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பிரதிப்பணிப்பாளராக (DPDHS) யாழ் மாவட்டத்தில் பணிபுரிந்தாலும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கு இணங்கவும் வைத்திய துறையில் கொண்டிருந்த ஆத்ம திருப்தியினாலும், அப்பதவியினை உதறிவிட்டு அனலைதீவு, வட்டுக்கோட்டை போன்ற அவசர வைத்திய தேவை உள்ள இடங்களில் தனது பொறுமையாலும் மென் போக்காலும் மகிழ்ச்சியாக பணியாற்றினார்.

இதனிடையே தன் மக்கட் செல்வங்களின் கல்வி மற்றும் நன்நடத்தையிலும் அக்கறை கொண்ட அன்னார், தனது சிரேஷ்ட புதல்வியான ஜனனி பிரியதர்சினியை அமரர்களான திரு திருமதி சின்னத்துரை செல்லம்மா தம்பதிகளின் புதல்வரான புஸ்பநாதனுக்கு மணமுடித்துக் கொடுத்து சௌமியா, அபிலாஷ் ஆகியோரை பேரர்களாகவும், இரண்டாவது புதல்வியான ஹம்சா சசி தாரணியை அமரரான திரு ஈஸ்வரானந்தன் மற்றும் திருமதி பிரியதர்சினி தம்பதிகளின் புதல்வனான மகிந்தனை மணமுடித்து கஜானி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிநயாவை பேர்த்திகளாகவும், திரு திருமதி கணபதிப்பிள்ளை பகவதி தம்பதிகளின் மகனான கிருபாகரனை மூன்றாவது மகளான சுகன்யாவிற்கு மணமுடித்து ஜதுசன், கஜீபன் பிரணன் ஆகிய பேரர்களையும் மூத்த மைத்துனரான அமரர் திரு கந்தையா மற்றும் திருமதி சற்குணவதி தம்பதியின் ஏக புதல்வன் நாவேந்தனை கவிதா எனும் கனிஷ்ட புதல்விக்கு மணமுடித்து வைத்து சேயோன், சேரன் எனும் பேரர்களையும் கண்டு மகிழ்ந்தார். தனது ஏக புதல்வனான விஷ்ணுகாந்தனை திரு திருமதி கணபதிப்பிள்ளை சத்தியபாமா தம்பதிகளின் ஏக புதல்வியான நிரோஜினிக்கு மணமுடித்து வைத்து மகிழ்ந்திருந்தார்.

அன்னார் தனது குடும்ப வாழ்க்கையை அன்புடனும் மகிழ்வாகவும் பிள்ளைகளுக்கும் மற்றும் அனைவருக்கும் முன்னுதாரணமாகவும் வாழ்ந்து தனது ஓய்வுகாலத்தையும் மக்கள் பணியாற்ற விரும்பி அரசினால் வழங்கப்பட்ட மீள்நியமனம் பெற்று வட்டுக்கோட்டை, அனலைதீவு அரசினர் வைத்தியசாலையிலும் பணியாற்றி வரும் வேளையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தினால் தனது சுயநினைவை இழந்தாலும் அன்னாரது வழமையான புன்சிரிப்பாலும் பண்பான நன் வார்த்தை பிரயோகத்தாலும் 17 வருடங்கள் அமைதியாக கழித்தார். இவ்வாறு இருந்த காலத்தில் 2016ம் ஆண்டு தனது துணைவியாருடன் கனடா நாட்டிற்குச் சென்று தனது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களைக் கண்டு மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவியாரின் அன்பான கவனிப்பாலும் அரவணைப்பாலும் தனது இறுதிக்காலத்தை மிகவும் அமைதியாககழித்து 20.04.2019 அன்று நல்லூராணின் நண்பகல் 12 மணி பூசை மணியோசையுடன் இரண்டறக் கலந்து நல்லூரான் திருவடியை நாடி நித்திய இளைப்பாறு அடைந்தார். அன்னாரது ஆத்ம சாந்தி அடையட்டும்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*



**இறைவனைத் தரிசிக்க விரும்பினால்**
**மனிதனுக்கு சேவை செய்யுங்கள்**
**இறைவனை அடைய விரும்பினால்**
**பட்டினியால் துயருறும் கோடிக்கணக்கான**
**மக்களுக்கு பணிபுரியுங்கள்.**

- சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவார்தங் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலங்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
## (முதலாம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

பண் - நட்டபாடை

தோடுடைய செவி யன்விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனைநாட் பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

பண் - நட்டபாடை

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மல திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே

பண் - நட்டபாடை

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளுமடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார் புனற் செல்வமல்கு சீர் கொள் செங்காட்டங்
குடியதனுட்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே.

பண் - தக்கேசி

பூவார் மலர்கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்களெரித்தவன்று மூவர்க்கருள் செய்தார்
தூமாமழை நின்றதிர வெருவித்தொறுவின் னிரையோடு
மாமாம்பிணை வந்தணையுஞ்சார லண்ணாமலை யாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பண் - இந்தளம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே

பண் - இந்தளம்

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ் மறைக்காட்டுறை மைந்தா
இது நன்கிறைவைத் தருள் செய்த வெனக்குன்
கதவந்திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

பண் - பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசாறு திங்கள்கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பண் - நட்டராகம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங் கடல் வையத்து
முன்னை நீபுரிநல்வினைப் பயனிடை முழுமணிதரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தாரபஞ்சமம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செழுத்துமே

பண் - கொல்லி

மானினேர்விழி மாதராய்வழு திக்கு மாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்று நீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல் சேர்
ஈனர் கட்கெளி யேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே.

பண் - புறநீர்மை

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார்

## நான்காம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பண் - கொல்லி

கூற்றாயின வாறுவிலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றநாதென் வயிற்று னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும் போ தறிய வொண்ணா
துணையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடையகோவே.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரானே.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவங்கமாலை

திருச்சிற்றம்பலம்

பண் - சாதாரி

தலையே நீ வணங்காய், தலை - மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந்தலைவனைத், தலையே நீ வணங்காய்

கண்காள் காண்மின்களோ, கடல் - நஞ்சுண்ட கண்டன் றன்னை
யென்டோள் வீசிநின்றாடும் பிரான்றன்னைக்,
கண்காள்காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ சிவ - னெம்பிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் றிற மெப்போதுஞ்
செவிகாள் கேண்மிங்களோ

மூக்கேநீமுரலாய், முது - காடுறைமுக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை, மூக்கேநீமுரலாய்

வாயேவாழ்த்துகண்டாய், மத - யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னை, வாயேவாழ்த்துகண்டாய்

நெஞ்சே நீ நினையாய், நிமிர் - புன்சடைநின்மலனை
மஞ்சாடுமலை மங்கை மணாளனை, நெஞ்சே நீ நினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர், கடி - மாமலர்தூவி நின்று
பைவாய்ப்பாம்பரையார்த்த பரமனைக், கைகாள் கூப்பித்தொழீர்

ஆக்கையாற் பயனென், அரன் - கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னாதவிவ் - வாக்கையாற் பயனென்

கால்களாற்பயனென், கறைக் - கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக் கோகரணஞ்சூழாக், கால்களாற்பயனென்.

உற்றாராருளரோ, வுயிர் - கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லானமக், குற்றாராருளரோ.

இறுமாந்திருப்பன்கொலோ, வீசன் - பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந்திருப்பன்கொலோ.

தேடிக்கண்டுகொண்டேன், திரு - மாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே,
தேடிக்கண்டு கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## ஐந்தாம் திருமுறை

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யினையடி நிழலே.

பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய்மறைக் காடரோ
கண்ணினாலுமைக் காணக்கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள்செய்ம்மினே.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே.

காமியஞ் செய்து காலங்கழியாதே
ஓமியஞ் செய்தங்குள்ளத் துணர்மினோ
சாமியோடு சரச்சுவதியவள்
கோமியும் முறையுங் குடமூக்கிலே.

திருச்சிற்றம்பலம்

## வீடுகளில் விளக்கேற்றும் போது இத்தேவாரத்தைப் பாட இல்லத்தில் ஒளி வீசும்

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தார பஞ்சமம்

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பர லருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் திருமுறை

## திருத்தாண்டம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்தும் வனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் த்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலித்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்த ன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவானாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வவம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள் வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேன்

எண்ணுகேனென் சொல்லியெண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே யெண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர்களை கணில்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தாய்
ஒக்கவடைக்கும் போது ணரமாட்டேன்
புண்ணியனோ யுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர்மேவிய புண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் திருமுறை

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

பண் - இந்தளம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தா வுனக் காளாயினி யல்லேனென லாமே.

பண் - நட்டராகம்

நீளநினைந்தடியே னுமைநித்தலுங்கை தொழுவேன்
வாளனகண்மட வாளவள் வாடிவருந்தாமே
கோளிலியெம் பெருமாள் குண்டையூர்ச்சில் நெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம் பெருமான வையட்டித்தரப் பணியே

பண் - நட்டபாடை

நத்தார் புடை ஞானம்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானைபுரி போர்த்தமழுவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
என்னே யுன்னையல்லாலினி யாரை நினைக்கேனே.

## எட்டாம் திருமுறை

## திருவாசகம் (மாணிக்கவாசக சுவாமிகள்)

பூசுவதும் வெண்ணீறு பூண்பதும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்தா ளிணைபாடிப்
போராற்வேற கண்மடவீர் பொன்னூச லாடாமோ

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே

புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர்தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநா அஞ்சு மாறே

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கம்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கெழுந் தருளுவ தினியே
பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

## ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

பண் - பஞ்சமம்

ஒளிவளர் விளக்கே உலாப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டனேன் விளம்புமா விளம்பே!
கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவல் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே

நையாத மனத்தினனை நைவிபபான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

பவளமால் வரையைப் பனி படர்ந்
தனையதோர் படரொளி தரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையும்
துன்றுபொற் சூழல் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம்புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும்
என்மனம் தழல் மெழு கொக்கின்றதே

ஏகநா யகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடி
யோமுக்கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

சூழலொலி யாழொலி கூத்தொழி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழாவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறநத
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி
லணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நானடமுக னங்கி
யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க
டிசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் படியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டாம் திருமுறை

## பெரிய புராணம்

திச்சிற்றம்பலம்

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாலவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதிய நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோலநீடி அருமறச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புற நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மல்ர்ந்தார்!

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

## அருணகிரிநாத சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ்மலர்கொடு பணிவேனே
முப்புர எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பி மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குறு மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

ஏறுமாயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனைவதைத்தமு கமொன்றே
வள்ளியை மணம்புனர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளால் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்தபெரு மாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாணிக்கவாசகர் அருளிச் செய்த



# சிவபுராணம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தழை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம்மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகி நின்று அண்ணிப்பானிதாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளக்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்.
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாயப் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னான்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழிம்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே.
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைத்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாயெம் பெருமான்வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாயவிருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோறு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குப்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் புற்றறுத்துப் பாரிக்கு மரியானே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் மொளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொள் எந்தை பெருமானே.
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கேநுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் பரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றனேம் மையா அரனே ஓ வென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்த பணிந்து.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

திச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற் கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமும் அவதானமுங்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே. 10

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கௌரிகாப்பு

விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாயப் புனைவதற்கு
எண்ணின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைக் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணம் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவனே அம்மாகாளி தாயே
கொடிய மகிக்ஷாசுரனைக் கூறு போட்டவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையவனைத்தோ அருள்மாரி பொழிந்தேனே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவீர்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லவையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கனப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குக் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோருக்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முக்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவராய சுவாமிகள் அருளிய

# கந்த சஷ்டி கவசம்

### காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடந்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தமும் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக.
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மாஉபில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராகவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுடிகு டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டிகுடிகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
எண்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேற இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக்குதத்தை வல்வேல் காக்க
பணத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வருகவேல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாக்ஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தின்னும் பழக்கடை முனியம்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம கூஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிதும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல சேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆணை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் ளென்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தெணனைக் கண்டாறகலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனாங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விக்ஷங்கள் கடித்துயர் அங்கம்
எறிய விக்ஷயங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தும்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவயொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காம மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடியை
நேச முடன்யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்க்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியான் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேர் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்கவென வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே.
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் நடியார் தழைத்திட வருள்செய்
கந்தர்சக்ஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சக்ஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மமர், சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத் தடியை
விழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தெனது உள்ளம், அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து உணவு ஆகச்
சூர பத்மாவைத் துணித்தனை யதனால்
இருபத் தேழுவர்க்கு உவந்(து) அமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்மை சேவடி போற்றி,
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக்(கு) ஓர் அரசே !
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

- கவசம் முற்றிற்று -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவெம்பாவை

## திருவெண்ணாமலையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே வந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும்தங்கோனைப்பாடேலோ ரெம்பாவாய். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள்வெவ்வேறாய்இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்புவெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார்தாள்பணிவோம்ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப்பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந்துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்திரனதன் கோயிற்பிணாப் பிள்ளை
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்து உன்கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிசெல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழிவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்.
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ராமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம் புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங் கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்த தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்க மலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின் மனித்தொவைீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாயப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய் 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எம்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே!
இரவு பகல் காணேனெடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே!
நல்லூரான் தஞ்சமொடி

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே!
கவலையெல்லாம் போகுமொடி

எத்தொழிலைச் செய்தாலென்
ஏவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகள் தஞ்சமெடி

சுாவமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னானெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு
# ஞான வைரவர்
# அர்சனை மாலை (108)
# வைரவர் புராணம்

### தியானம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்ட முன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையெ வால மாமெனச்
செஞ்சுடர் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவோம்.

### அர்ச்சனை

பிரமன்றன் சிரமரிந்த பெருமானே போற்றி
இரப்பதற் கொருதலையை உடையானே போற்றி
கணங்களொரு வாகனமா யுடையானே போற்றி
அணங்காகக் காளியை உடையானே போற்றி
அமலனுக்கொரு மைந்தனாய் வந்தவரே போற்றி
இமவான்றன் புத்திரியின் புத்திரனே போற்றி
கையொன்றில் திரிசூலம் உடையவரே போற்றி
மையொழுகு கண்ணிக்கு மகனாரே போற்றி
அம்மை சிவகாமி பாலனே போற்றி
இம்மையிலே எல்லாந் தந்தவனே 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவருக் கெளிமையாய் வந்தவனே போற்றி
முடியுடைய வேந்தக்கும் முதல்வனே போற்றி
படியிலே பாவங்கள் அறுப்பாய் போற்றி
மிடியுடையார் மிடியினை மடிப்பவனே போற்றி
கந்தனுக்கு முன்வந்த கருணாமூர்த்தியே போற்றி
எந்தனுக்கு அருள்புரிய வந்தவரே போற்றி
கணபதிக்குப் பின்வந்த கபாலியே போற்றி
கணப்போதில் வினைகளைச் சாடிடுவாய் போற்றி
காசினியோர் தொழுதிருந்த கடவுளே போற்றி
பேசினிய பெருமானே பெரியானே போற்றி

தரணியி லுயிர்வாழ வந்தவரே போற்றி
நாரணர்க்கும் நான்முகர்க்கும் நாயகனே போற்றி
ஆரணங்க ளறியாத ஐயனே போற்றி
மாரனை வென்றெடுத்த மதியனே போற்றி
அகண்டபரி பூரணனாம் ஐயனாரே போற்றி
மகரிஷிகள் போற்றுகின்ற மாமணியே போற்றி
அம்மை சிவகாமி பாலகனே போற்றி
மும்மைக்கும் முதலாக உள்ளோனே போற்றி
ஆதி அந்தம் இல்லா தவரே போற்றி
பாதிமதி வேணியன் மகனே போற்றி

அண்டமெல்லாங் கடந்த அருட்சுடரே போற்றி
மண்டினி ஞாலத்தை மகிழ்விப்பவரே போற்றி
சிவமூர்த்த மாக நிற்பவரே போற்றி
பலவினைகள் எல்லாம் ஒழிப்பவரே போற்றி
பைரவர்கள் வணங்கும் பகவானே போற்றி
வைரவர் என்னும் பெயருடையோய் போற்றி
வடுகாய நம என்று வணங்கிடுவோம் போற்றி
சுடுகாட்டில் நடமாடும் சூலபாணியே போற்றி
பைரவ புவனதத்தில் இருப்பவரே போற்றி
பாதாள ஞான வைரவரே போற்றி

தோற்றத்தில் நீலநிறம் உடையவரே போற்றி
ஆற்றலிலும் அம்மானை வென்றவரே போற்றி
திருவடியில் சிலம்பினை அணிந்தவரே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மறைகள் ஆறங்கம் அணிந்தவரே போற்றி
மார்பிலே தலைமாலை உடையவரே போற்றி
கார்போன்ற நிறத்தை உடையவரே போற்றி
மழுவென்னும் ஆயுதம் உடையவரே போற்றி
அழுதார்க்கு அருள்புரியும் ஆண்டவரே போற்றி
பாசமெனுங் கயிற்றை உடையவரே போற்றி
பாச வேரறுக்கும் பகவானே போற்றி

உடுக்கையை ஏந்தி ஒலிப்பவரே போற்றி
முக்கண்கள் உடைய முதல்வனே போற்றி
கடுக்கை மாலை பூண்டவரே போற்றி
எக்காலமு மெமைக் காப்பவரே போற்றி
பயங்கரத் தோற்றம் உடையரே போற்றி
வியத்தக்க அற்புகதங்கள் செய்தவரே போற்றி
கோரப் பற்களினை உடையவரே போற்றி
வீரவேல் முருகனுக்குத் தமையனாரே போற்றி
செஞ்சடையை உடைய சேவகனே போற்றி
நஞ்சணி கண்டனின் நன்மகனே போற்றி

சீற்றநகை கொண்ட முகமுடை யோய் போற்றி
ஏற்றமெல்லாம் எமக்களிக்கும் நாயகனே போற்றி
ஆணவத்தை அடக்கிய ஆண்டவனே போற்றி
நாணத்தை நமக்களித்த நாயகனே போற்றி
முனிவர்களின் செருக்கை அழித்தவனே போற்றி
நனிபெரிதும் ஞானத்தை அளித்தவனே போற்றி
தேவர்களின் அகங்காரம் அழித்தவனே போற்றி
பாவவினை பற்றறுக்கும் பகவானே போற்றி
ஊழிக்காலத்தில் உலகினை அழிப்பவரே போற்றி
ஆழியிலும் எம்மை அணைப்பவரே போற்றி

நான்மறையே நாய்வடிவாய் ஆனவரே போற்றி
கான்முளையாம் எம்மைக் காத்தருள்வாய் போற்றி
அறுவகைச் சமயத்தின் பைலவரே போற்றி
நறுமலர் மாலையை அணிபவரே போற்றி
வடைமாலை தன்னை விரும்புபவரே போற்றி
நடைபாதை தன்மையும் நயந்தவரே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியடியும் புங்கடியும் இருப்பரே போற்றி
தெளிவுடையார் உள்ளத்து இருப்பவரே போற்றி
அரசடியும் ஆலடியும் அமர்பவரே போற்றி
பரஞானம் தந்தருளும் பரமனே போற்றி 80

காவலுக்கு ஒருதெய்வம் ஆனவரே போற்றி
ஏவலுக்கு மியைந்துளமைக் காத்தவரே போற்றி
ஷேத்திர பாலகர் ஆனவரே போற்றி
ஏத்திஎழு வார்க்கன்ப ரானவரே போற்றி
பெருந்தொந்தி உடைய பெம்மானே போற்றி
அருமறைகள் ஓலமிடும் ஆண்டகையே போற்றி
உருண்ட கண்கள் உடையவரே போற்றி
மருண்ட மனத்தை மலர்விப்பவரே போற்றி
ஆடை யெதுவுமற்ற பெருமானே போற்றி
ஓடையிலே ஊறிவரும் அருஞ்சுனையே போற்றி 90

அரவ அணிகலன்கள் அணிந்தவரே போற்றி
பரவ இனியவரே பகவானே போற்றி
எண்ணெய் மூர்த்தங்கள் இசைந்தவரே போற்றி
மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ந்தவரே போற்றி
அசிதாங்க பைரவர் ஆனவரே போற்றி
பசிதீர்க்க வந்தருளும் பகவானே போற்றி
குருபைரவ ராகிநின்ற கோமானே போற்றி
அருமறைக ளுக்குமெட்டா ஆண்டவன் போற்றி
கண்ட பைரவர் ஆனவரே போற்றி
கண்ட இடமெல்லாம் கருணைசெய்வாய் போற்றி 100

குரோத பைரவர் ஆனவரே போற்றி
விரோத மொன்றில்லா விழுத்துணையே போற்றி
உன்மத்த பைரவர் ஆனவரே போற்றி
ஜென்மத்திலும் உமை மறவேன் தெய்வமே போற்றி
கபால பைரவர் ஆனவரே போற்றி
சபாபதியின் மைந்தர் ஆனவரே போற்றி
சபரிமலை ஐயப்பா சரணம் சரணம்
வடுகாய நமஓம் வடுகாய போற்றி 108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ தேவி கருமாரி அம்மன்

திருச்சிற்றம்பலம்

கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி தெய்வ யானை அம்மா
விறகோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே (கற்பூர)

புவனம் முழுவதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் இருக்கும் பரவேஸ்வரி
நவ நவமயாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
கார் இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ யாதரி (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீ இருக்க உலகில் மற்ற
அந்நியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிழட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல் கேட்டு உன்முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் இரண்டும் உன் உருவே காணவேண்டும்
கால் இரண்டும் உன் அடியே நாடவேண்டும்
பண் அமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பத்தியோடு கைஉனையே கூடவேண்டும்
எண்ணம் எல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆகவேண்டும்
மண் அளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளையும் தீரும் அம்மா (கற்பூர)

அன்புக்கே நான் அடிமை ஆக வேண்டும்
அறவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவை எல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும் (கற்பூர)

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய் அதனில் சக்தி இல்லை
நடந்திடவோ கால் இரண்டில் ஆகவில்லை
செம்பவள வாய் அழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியானே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவும் இல்லை (கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலவாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாள் இல்லை தாயே உன்னை
பொருளோடும் புகழோடும் வைப்பாய் என்னை (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய தேவி

ஜெய ஜெய தேவி ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்

துர்க்கை அம்மனை துதித்தால் என்றும் துன்பம் பற்நதோடும்
தர்மம் காக்கும் தாயாம் அவளை தரிசனம் கண்டால்
தர்ம வினைகளும் ஓடும் சர்வமங்களம் கூடும்

(ஜெய ஜெய)

பாற்கரங்கள் பதினெட்டும் நம்மை சுற்றி வரும் பகைவிரட்டும்
நெற்றியிலே குங்கமப் பொட்டும் வெற்றி பாதையைக் காட்டும்

(ஜெய ஜெய)

ஆயிரம் கண்கள் உடையவளே - ஆதிசக்கதியவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாயைப் போல் நம்மைகாப்பவளே

(ஜெய ஜெய)

சங்க சக்கரம் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலுடன், சூலமும்
தங்க கைகளில் தாங்கி நிற்பாள் அவள் தங்க கைகளில் தாங்கி நிற்பாள்

(ஜெய ஜெய)

சீங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள் திங்களை முடிமேல்சூடி நின்றாள்
கருணைக் கண்கொண்டு பாரத்திருப்பாள் மங்கள வாழ்வதந்திடுவாள்

(ஜெய ஜெய)

திருமகள் கலைமகள் அவளே திருவருள் புரியும் மலை மகளும் அவளே
அங்கயற் கண்ணியும் மங்கயற்கரசியும் அவளே

(ஜெய ஜெய)

முண்டக் கண்ணியும் அவளே அபிராமி அம்மையும் அவளே
ஜெய ஜெயதேவி துர்க்கா தேவி சரணம்

கனக துர்க்காதேவி சரணம்
கனக துர்க்காதேவி சரணம்

தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

(தேவி துர்க்கையே ஜெய தேவி துரக்கையே என்ற நாமம் வரும் போதும் விரதம் இருப்பவர்கள் நமஸ்காரம் செய்வது நல்லது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரஹ தோஷம் நீங்க

## ஞாயிறு

சீலமாய்வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## திங்கள்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவில்லாதருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு

## புதன்

இதமுற வாழ் இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி

## வியாழன்

குணமுள்ள வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வ மகிழ்வடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பரகுருநேசா
கிரகதோஷ மின்றிக் கடாட்சித் தருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி

சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே.

## சனி

சங்கடம் தீர்க்கும் சனிபகவானே
மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்சகம் வாழ இன்னருள் தாதா

## ராகு

அரவேனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அரள்புரி அனைத்திலும் வெற்றி
இராகுக் கனியே ரெம்மியா போற்றி

## கேது

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுதேவே கேண்மையாய் ரஷி!

இந்த நவக்ரக ஸ்தோத்திரம் சொல்லி ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மலர் வீதம் ஒன்பது மலரை இடவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரதப் பாடல்கள்

## நந்தீஸ்வரர் பெருமை

நந்திஎம் பெருமான் தன்னை
நாடொறும் வணங்கு வோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்
பொலிவுறு செல்வம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும்!
சிறப்புறு மக்கள் சேர்வர்!
இந்திர போகம் கிட்டும்
இணையிலா வாழ்வுதானே!

## நலம் தரும் நந்தி

கந்தனின் தந்தையைத் தான் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய்

ஒன்பது கோள்களுக்கும் உயரியபலன் கொடுப்பாய்
பொன் பொருள் குவிய் வைப்பாய் புகழையும் வளர்த்து வைப்பாய்

சிந்தனை வளம் கொடுப்பாய் சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உனைத் துதித்தேன் நாடிவந்தெம்மைக் காப்பாய்

மாலைகள் ஏற்க வைப்பாய் மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்க வைப்பாய் விதியையும் மாற்றி வைப்பாய்

சோலையின் வண்ணப் பூவைச் சூடிடும் நந்தி தேவா!
நாளும் நான் உனைத் துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய்

தஞ்சையில் பெரிய நந்தி தளிருடல் வெண்ணெய் சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் தந்தை குந்திடும் ரிஷப நந்தி
தஞ்சமாய் உனையடைந்தேன் தயங்காது எம்மைக் காப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியாரெல்லாம்

ஓம் நமப் பார்வதி பதயே
அரஹர மகா தேவா
ஓம் நமப் பார்வதி பதயே
அரஹர மகா தேவா
ஓம் நமப் பார்வதி பதயே
அரஹர மகா தேவா
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரத்தி

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெ சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் உனைப் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா - ஓம் ஸ்ரீ ஜெய....

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய அம்மம்மா
தேவையெல்லாம் அடைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஸ்ரீ ஜெய.....


இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈசுவரி வரமருள்வாய் அம்மம்மா
ஈசவரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ ஜெய...

காசினி யெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய்
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழ வழிகாட்டி டுவாய்
ரஷதேவியுடன் அடைக்கலமே - ஓம்ஸ்ரீஜெய....

நமஸ்காரம் கூறி கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து அம்மம்மா
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஸ்ரீஜெய...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளமைக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத் தலைவர் அமரர் திரு கணபதிப்பிள்ளை நடராஜா 20.04.2019 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எம் துயரில் பங்குபற்றிய அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு உதவிகள் புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், தேநீர், உணவுகள் தந்துதவிய நல் உள்ளங்களுக்கும். இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் இந் நினைவு மலரை அச்சிட்டு உதவிய சீ.கே.ஜே பதிபகத்தினருக்கும் எங்களது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்


82/18 செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

-திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org